9th November 1966]

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, may I give a little more information on that point ?

அங்கே இருக்கக் கூடிய அரவிந்த ஆசிரமத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு இண்டஸ்ட்ரியல் டவுன்ஷிப் வைக்க முன் வந்திருக்கிறார்கள். பிரஞ்சு சர்க்காருடைய ஒத்துழைப்புக்கொண்டு இதை ஏற்படுத்த இருக்கிறார்கள். இதனால் அந்தப் பகுதியில் நல்ல தொழில் வளம் ஏற்படும் என்று நினைக்கிறேன். ஆகவே தான், இந்த மனையை ஒதுக்கவேண்டும் என்பதாக இண்டஸ்ட்ரீஸ் இலாகாவுக்கு அப்ளை செய்து கொண்டிருக்கிறார்கள். அதைத் தொழில் இலாக்கா பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்தத் தொழில்பேட்டையை நிறுவ அரவிந்த ஆச்ரமமே அக்கறை காட்டுகிறதா ? அல்லது புதுச்சேரி சர்க்காரும் சேர்ந்து அக்கறை காட்டுகிறார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அரவிந்த ஆசிரமமேதான் அக்கறை காட்டுகிறது. இவர்களுக்குத்தான் பிரஞ்சு நாட்டு உதவி, பணம் எல்லாம் கிடைக்கும் என்ற நிலைமை இருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : அப்படியானால் பஞ்சாயத்துச் சட்டத்தைத் திருத்த அரசாங்கத்திற்கு அபிப்பிராயம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுபற்றி எனக்குத் தெரியாது.

நகைத்தொழிலாளர்கள்

* 558 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தங்கக் கட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்ட நகைத் தொழிலாளர்களிடமிருந்து குடியிருப்பு நிலம் கோரி 1—10—1965-லிருந்து எத்தனை மனுக்கள் வந்துள்ளன ஜில்லாவாரியாக.

(இ) அவைகளின் மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது ?

(உ) எத்தனை நகைத் தொழிலாளர்களுக்கு குடியிருப்புக்கு நிலம் வழங்கப்பட்டிருக்கிறது ?

(எ) அவசியமான இடங்களில் நிலம் ஆர்ஜிதம் செய்து வழங்கப்படுமா ?

THE HON. SRI V. RAMAIAH : (a) to (d) A statement [a] is placed on the Table of the House.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அரசாங்கம் கொடுத்திருக்கிற தகவல்களில் இருந்து கோயம்புத்தூர் மாவட்டத்தில் இருந்து மட்டும் 383 மனுக்கள் வந்திருக்கிறதாக தெரிகிறது. செங்கல்பட்டில் 40 மனுக்கள் வந்திருக்கின்றன. முப்பத்தாறுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் கோயம்புத்தூர், இராமநாதபுரம் ஆகிய

a Printed as a Appendix VI on pages 899-903.

[9th November 1966

இடங்களில் எல்லாம் அதிகமாக மனுக்கள் வந்தும் நகைத் தொழிலாளர்கள் குடியிருப்புக்கு நிலம் ஒதுக்கப்பட்டதாகத் தகவல இல்லே. அதற்கு என்ன காரணம்? நிலம் ஒதுக்குவதற்கு புறம்போக்கு நிலமே இல்லேயா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா: நிலம் இருக்கும். ஆனல் அவர்கள் கேட்ட இடம் இருந்திருக்காது. அதனல் தான் ஒதுக்கிக்கொடுக்க முடியவில்லே.

திரு. து. ப. அழகமுத்து: கோயம்புத்தூர் மாவட்டத்தில் 383 மனுக்கள் வந்திருக்கின்றன, ஒன்றுக்கும் கொடுக்கப்படவில்லே. இராமநாதபுரத்தில் 144 மனுக்கள் வந்திருக்கின்றன. ஒன்றுக்கும் கொடுக்கப்படவில்லே. செங்கல்பட்டில் வந்த மனுக்களே 40 தான். முப்பத்தாறு பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் செங்கல்பட்டில் நிலம் இருந்தது, கொடுத்தார்கள், மற்ற மாவட்டங்களில் நிலம் இல்லே, ஆகவே கொடுக்கவில்லே என்பது தானு? அல்லது அவர்கள் துரிதமாக நடவடிக்கை எடுக்கவில்லே என்பதா? நடவடிக்கை எடுக்காததற்குக் காரணம் என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா: முழு விவரம் என்னிடம் இல்லே. கலெக்டரிடத்தில் இந்த மனுக்களேக் கொடுக்கிருர்கள். அவர்கள் குறிப்பிட்டு கேட்கிற நிலம் அவைலபிளாக இல்லாவிட்டால் மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன. அந்த நிலம் இருந்தால் கொடுக்கப்படுகிறது என்பதாகத்தான் இருக்கும்.

திரு. எம். எஸ். செல்வராஜன்: அவர்களுக்கு நிலம் வழங்க மற்றவர்கள் நிலத்தை ஆர்ஜிதம் செய்து கொடுக்க சட்டபூர்வமாக இடம் இல்லே என்று சொல்லப்படுகிறது. நிலம் அற்ற ஏழை களுக்கு நிலம் கொடுக்க நில ஆர்ஜிதம் சட்டப்படி செய்ய வழி ஏற்பட்டிருக்கிறது. அதன் மூலமாவது நில ஆர்ஜிதம் செய்து இவர்களுக்கு நிலம் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: அந்தத் திட்ட அடிப்படையில் இவர்களுக்கு நிலம் வழங்கத் தகுதியிருக்கும் பட்சத்தில் அதை அரசாங்கம் கவனிக்கும்.

அழகநேரி இனும் கிராமம்

* 559 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம்** உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லா அழகநேரியென்ற இனும் கிராம மக்களிடமிருந்து சென்ற ஆண்டு ஓர் முறையீடு வந்ததா?

(இ) அவர்களின் கோரிக்கை யாது?

(உ) அதன்மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை விவரம் என்ன?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) Yes.

(*b*) They have represented that the wet and dry lands in the village are being cultivated by 46 ryots, that they have applied for ryotwari patta to the Settlement authorities under the provisions